[1995 மார்ச் 15

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

2—

உரிமையியல் நீதிமன்றங்களில் அரசு வழக்குரைஞர் மற்றும் வழக்கறிஞர்களை நியமித்தல்.

*9305–திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உரிமையியல் நீதிமன்றங்களில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நியமன முறையில் அமர்த்தப்படும் அரசு வழக்குரைஞர் (Government Pleader) மற்றும் அரசு வழக்கறிஞர்களை (Government Advocates) நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உரிமையியல் நீதி மன்றங்களில் மூன்று ஆண்டுக் காலத்திற்கு ஒரு முறை நியமன முறையில் நியமிக்கப்படும் அரசு வழக்குரைஞர்களின் மொத்த எண்ணிக்கை 121 ஆகும். அவற்றில் இதுவரையில் 97 அரசு வழக்குரைஞர்கள் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். காலியாக உள்ள 24 பதவியிடங்களுக்கு நியமனம் செய்ய விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தக் காலி இடங்களுக்கு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படவுள்ளதாகக் கூறினார்கள். அது எப்போது நியமிக்கப்படும்? இன்னும் அங்கே உள்ள காலியிடங்களுக்கு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படும் போது, பெண் வழக்கறிஞர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து நியமிக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே அதற்குரிய பட்டியலைக் கேட்டிருக்கிறோம். ஏழாண்டுகள் வழக்கறிஞர்களாக

1995 மார்ச் 15]

இருந்தால், அந்தப் பதவிக்குத் தகுதியாவார்கள். ஆகவே பெண் வழக்கறிஞர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே மனு செய்தால், அதனை அரசாங்கத்திற்கு அவர்கள் அனுப்புவார்கள். பிறகு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நியமிப்பார்கள்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலைச் சொல்கின்றபோது ஏழாண்டுகள் அவர்கள் வழக்கறிஞர்களாகப் பணியாற்றி இருந்தால், பெண் வழக்கறிஞர்களும் நியமிக்கப்படுவார்கள் என்று கூறியதற்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அப்படி நியமிக்கப்படுகிறபோது, இப்போதே மூன்றாண்டுகள் ஆனவர்களைப்—புதிதாக மீண்டும் அரசு வழக்கறிஞர்களை நியமிக்கின்ற போது, முறையாக நீண்ட அனுபவம் உள்ள வழக்கறிஞர்களை—நியமிப்பதற்கு பரிசீலனை செய்து, அதிலே அனுபவம் உள்ளவர்களைத் தேர்வு செய்து நியமிக்க அரசு ஆவன செய்யுமா, அதைப் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.எஸ். அமர்நாத்.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அடுத்த பெரிய நீதிமன்றமாக மதுரை மாவட்ட நீதிமன்றம் உள்ளது. அங்கே மதுரை மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞரும், மதுரை மாவட்ட உரிமையியல் வழக்கறிஞர் பணியில் இருப்பவரும் தற்காலிகமாகத்தான் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று, 24 ஊர்களில் நிரந்தரமாகப் பணியில் அமர்த்தப்படும்போது, மதுரை மாவட்ட குற்றவியல் வழக்கறிஞரும், மதுரை மாவட்ட உரிமையியல் வழக்கறிஞரும் நிரந்தமாகப் பணியில் அமர்த்தப்படுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொல்லிய வண்ணம், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே நாங்கள் பரிந்துரை கேட்டிருக்கிறோம். அந்தப் பட்டியல் வந்தவுடன், தகுதியானவர்களை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நியமிப்பார்கள்.

[1995 மார்ச் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கோபாலகிருஷ்ணன்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு நியமிக்கப்படுகிற அரசு வழக்கறிஞர்களில், தாழ்த்தப்பட்ட இன வழக்கறிஞர்களை நியமிப்பதற்கான கம்யூனல் ரொட்டேஷன் அல்லது ரிசர்வேஷன் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நியதி தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் ரிசர்வேஷன் தற்போது இல்லையென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 69 விழுக்காடுகளைப் போராடிப் பெற்றுத் தந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில், 69 விழுக்காடுகள் என்பதை நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் நியமன விஷயத்திலும் உடனே கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த வழக்கறிஞர்கள் நிரந்தர அரசு அதிகாரிகள் அல்ல. It is a tenure post. தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். இப்போது வழக்கறிஞர் தவறு செய்துவிட்டால் ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து We will terminate his services. ஆகவே, அந்தப் பதவி நிரந்தரப் பணி அல்ல. அது தற்காலிகப் பணி. It is a tenure post. எனவே, இதிலே அந்தப் பிரச்சினை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்ன்மெண்ட் பிளீடர்ஸ் மற்றும் பப்ளிக் பிராசிகியூட்டர்ஸ் ஒப்பந்த அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நியமிக்கப்படுகிறபோது திறமையான வழக்கறிஞர்களை நியமிக்கின்ற ஓர் அடிப்படையை இந்த அரசு கைக்கொள்ள வேண்டும். கர்ம வீரர் காமராசர் காலத்தில் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் திறமை மிக்க வழக்கறிஞர்கள்தான் அப்போது கவர்ன்மெண்ட் பிளீடர்ஸ் மற்றும்

1995 மார்ச் 15]

பப்ளிக் பிராசிகியூட்டர்ஸ்களாக நியமிக்கப்பட்டார்கள். ஆனால் பின்னர் அந்த நிலைமை எல்லாம் மாறி அரசியல் கட்சிகள் இதிலே புகுந்துவிடுவதால், வழக்கை நடத்தக்கூடியவர்கள் சரியாக நடத்த முடியாமல், பல வழக்குகள் தோல்வியைச் சந்திக்கின்றன. ஆகவே, திறமையின் அடிப்படையில் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இனி கட்சி பாகுபாடு எதுவுமின்றி திறமைக்கே முதலிடம் அளித்து கவர்ன்மென்ட் பிளீடர்ஸையும் பப்ளிக் பிராசிகியூட்டர்ஸையும் நியமனம் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசியல் கட்சியிலே இருப்பதன் காரணமாகவே திறமையாளர்களை ஒதுக்குவது என்பது அது இயற்கை நியதி ஆகாது. நீதி ஆகாது. அதே நேரத்திலே திறமை பிளஸ் loyalty to the Government-- அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருப்பவர்கள்-- (மேசையைத் தட்டும் ஒலி) அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருப்பவர்களைத்தான் நாங்கள் வழக்கறிஞர்களாக வைக்க வேண்டுமே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) வேர்-புழுக்களை—எங்களிடத்திலே வந்து வேர்-புழுக்களாக இருப்பவர்களை வழக்கறிஞர்களாக வைக்கக்கூடாது. ஆகவே, இதிலே விழிப்பாக இருந்து அரசுக்காக வாதாடுபவர்கள், அரசின் மீது நம்பிக்கை கொண்டவர்கள், அரசினுடைய கொள்கையை வழக்குமன்றத்திலே உறுதியாக, தடுமாறாமல், அசையாமல், விட்டுக் கொடுக்காமல், வேலி தாண்டாமல் இருக்கின்றவர்களாகப் பார்த்து திறமையாளர்களை—அவர்கள் எந்த அரசியல் கட்சிக்காரர்களாக இருந்தாலும், விசுவாசம் உள்ளவர்களைத்தான் இந்த அரசு நியமிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்படிப் பார்த்தாலும் திரு. ஞானசேகரனை நியமிக்க முடியாது என்பது பொருள்படுகிறது. (சிரிப்பு) திருமதி மணிமேகலை.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியாக ஆஜராகாத வழக்கறிஞர்கள்மீது ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஏற்கெனவே 97 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். இவர்களில் எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

[*1995 மார்ச் 15*

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி விவரம் வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பல்வேறு சிறப்பான விளக்கங்கள் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்ன்மென்ட் பிளீடர்ஸ், அடிஷனல் கவர்ன்மென்ட் பிளீடர்ஸ், கவர்ன்மென்ட் அட்வகேட்ஸ் ஆகியோரை நியமனம் செய்யும்போது இளம் வழக்கறிஞர்களை தகுதி, திறமை அடிப்படையில் நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தில் சில இடங்களில் கவர்ன்மென்ட் அட்வகேட்ஸ் போஸ்ட் காலியாக உள்ளதாக அறிகிறேன். அதுபற்றி அரசுக்கு தகவல் உள்ளதா? அவ்வாறு இருந்தால் உடனே நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கேட்கப்பட்டுள்ளது சபார்டினேட் கோர்ட்ஸ், டிஸ்ட்ரிக்ட் கோர்ட்ஸ் பற்றியது. சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய வழக்கறிஞர்கள் விவரம் வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டு விவரத்தைப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. பாலகங்காதரன்.

திரு. ஜே. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வழக்கறிஞர்கள் மற்றும் பப்ளிக் பிராசிகியூட்டர்களுக்கு மூன்று ஆண்டுக்கால அளவு கொடுக்கப்பட்டு இருக்கின்றது. சிவில் வழக்குகளிலே, 3 ஆண்டுக்குள்ளாக வழக்குகள் முடிவடைவது மிகக் குறைவாக இருக்கின்றது. எனவே, அந்த மூன்று ஆண்டுக்கால அளவை நீட்டித்து, அந்த வழக்குகள் முடியும்வரை, ஒருசில வழக்குகள் முடியும்வரை 5 ஆண்டுகள் என்று கால அளவை நீட்டித்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுடைய பணிகாலம் என்பது, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அவர்கள் வழக்கை நடத்துகிற பாங்கு,

1995 மார்ச் 15]

திறப்பாடு, திறமை, விசுவாசம்--இவைகளின் அடிப்படையிலே தானே தவிர, வழக்குகளின் அடிப்படையிலே அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் நீதிமன்றங்கள் தற்சமயம் முன்சீப் கோர்ட்டாக கன்வெர்ட் செய்யப்பட்டுள்ளது. அந்த கோர்ட்களில் தனியாக கவர்ன்மென்ட் பிளீடர்ஸ் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியமிக்கப்படமாட்டார்கள். ஏற்கெனவே சில இடங்களிலே வேலைகள் குறிப்பாக ஜுடிஷியல் மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்களில் குற்றவியல் வழக்குகள் குறைவாக இருந்த காரணத்தினாலேதான், அதைச் சீரமைக்கின்ற பணியாக, ஸ்ட்ரீம்லைன் செய்வதாக, பேக்கேஜ் ஸ்கீமாக கொண்டுவரப்பட்டு இருக்கிறது. நீதிபதிகளுக்கும் போதுமான வேலை இருக்கும்; அரசு வழக்கறிஞர்களுக்கும் புதிய திட்டத்தின்படி போதுமான வேலை இருக்கும்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

3—

குறிஞ்சிப்பாடி தொகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

26073-*திரு. கு. சிவசுப்பிரமணியன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி, தீர்த்தனகிரி பஞ்சாயத்து, குளத்துமேடு, அனுகம்பட்டு ஊராட்சி, தொட்டில்தோப்பு ஆகிய இடங்களில் வசிக்கும் தகுதியுள்ள மக்களுக்கு மனைப்பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,